உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, ஐப்பசி } மலர் எ

க. திருக்குறளுதலிய நெறிமுறை 229
திரு. K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L.,

உ. திருவிளையாடற் புராணவாராய்ச்சி 235
திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.,A. B.L.,

௩. இயைபு நூல் 243
திரு. A. சீனிவாசாச்சாரியாரவர்கள் B.A., L.T.,

ச. கருவிலே வாய்த்த திரு 249
வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்

ரு. காலவாராய்ச்சி 257
திரு. கோமான். ம. வி. இராகவன் அவர்கள்

சு. நன்கொடைகள் 264
பொழிற்றொண்டர்

எ. சித்தரந்தாதி 13—14
திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்.

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௰உ | தாது, ஐப்பசி | மலர் எ |


உ

## திருக்குறளுதலிய நெறிமுறை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., B.L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 6, பக்கம் 208)

இதுகாறும் நல் வாழ்க்கைக்குரிய பெற்றிமைகளையும் அவற்றின் நலப்பாட்டினையும் ஆய்ந்து பின்னர் அவ்வாழ்க்கைக் கிடையூறான, இருமனப் பெண்டிர், பெண்வழிச்சேறல், கள், கவறுகள், இரவு, இரவச்சம் முதலியவற்றையும் முற்றும் வேண்டப் படாததென நிறுவினம். மனவலிக்குக் காரணமாக யிருந்த வாய்மையும் ஈகையும் முதலியவற்றையும் கண்ட பின்னர், உடல்வலிக்குக் காரணமாக நம்வாழ்வை பிணிவழிப் படாது நலமுறச் செய்ய இன்றியமையாதவைகளை ஒருசிறிது கவனிப்பாம். நமக்கும் பிறருக்கும் நம்உடல் நலமுற்றிருந்தால் தான் பயன்படுமாதலின் உடலின் நல் வழிக்கு இடையூறாகிய

பிணியையும் அதனை நீக்கும் மருந்தையும் வேண்டிய அளவான் திருவள்ளுவர் உடற் காப்புக் குரிய 'மருந்து' எனும் அதிகாரத்தில் விரித்துக் கூறுகின்றனர். திருவள்ளுவர் நம்முடல் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் இயல்பு வாய்ந்ததென்று கருதி நலவழிப்படி வாழ்தல் வேண்டுமென அறிவுறுத்துவது கருதற்பாற்று. அவ்வாறே நலவழிகளை நாடாது நடப்போமாயின் நோயுறுவோமாதலின், நாம் நாடாது விட்ட வழியை நாடி நோயினை நீக்க வேண்டும். அஃதே சிறந்த வழியென்றும், அந் நல்வழியைப் பின்பற்றினல்தான் நோய் நீங்குமெனவும், 'நோய்நாடி நோய் முதனாடி யது தணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்ற செழுங் குறட்பாவில் தெள்ளத் தெளிய திருவள்ளுவர் விளக்கியுள்ளார். நோய்கள்யாவும் உண்ணும்உணவின் மிகையானும் குறையானும் வருதலான், திருவள்ளுவப்பெரியார் உடல் நலத்திற்கு மீதூண் விரும்பாமையைப் பன்முறை பின் வருமாறே வலியுறுத்து கின்றனர்.

i மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்

ii அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க் குமாறு

iii அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

iv மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு

v இழிவறிந் துண்பான் கணின்பம் போனிற்குங்
கழிபே ரிரையான் கணோய்

vi தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்

ஆதலின் உணவால் பயனடைவோர் பசித்த பின் அளவறிந்து சிறிது குறைவாகவேயுண்ணின் அவரது உயிர்க்கு ஊறுபாடிலாதாகும். உலக வாழ்க்கையை உவக்கும் தன்மையவர் அவ்வாழ்க்கைக்குரிய மாண்புகளை நன்கறிந்து உடல்நலனை யுணர்ந்தவராயிருப்பார். அஃதில்லையாயின் அவர்கள் பல பிணிவாய்ப்பட்டு

தங்கள் வாழ்க்கையை துன்ப நிலையமாய் வைத்து வாழக் கடவராவர்.

தீயும் வளியும் விசும்புபயந் தாங்கு, நோயுமின்பமும் இவ் வுலகம் பெற்றதனால் இந் 'நாமநீர் வைப்பி'னதியல்பையும், நம் வாழ்வினதியல்பின் உண்மைகளையும் மெய்மைகளையும் எவ்வா றெடுத்து செந்நாப்போதார் விளங்க வைக்கின்றனரென்பதைச் சிறிது ஆராய்வோம். 'நெருநலுள னொருவனின்றில்லை யென் னும் பெருமையுடைத் திவ்வுலகு' என்ற குறளில் நேற்றிருந் தாெனாருவன் இன்று இறந்துபோனானென்றும் பெருமையை யுடையதாய் இந்த உலகமிருக்கின்றதென திருவள்ளுவர்கூறி, உறங்கி விழித்தாலொக்கும் இப்பிறவி யென்றுணர்த்த 'உறங் குவது போலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு' என வள்ளுவப் பெருந்தகையார் மொழிந்தருளினர். மற்றும் இவ்வுடலமோ

'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது'

இஃதன்றியும் இது.

'பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை;'
'அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது;'
'மூப்பு விளிவுடையது தீப்பிணி யிருக்கை'

எனவே இவ்வுலகத்தையும் இவ்வுடலையும் மெய்ப்பொருள்க ளெனக்கொள்ளலாகாது. இவ்வுடம்பு அழிந்தால் யாவும்அழிந்து போகுமெனவும் எண்ணுதல் தகாது. முற்பிறப்பில் தொடங் கிய வினைகள் யாவும் இப்பிறவியிலும் இனிவரும் பிறவிகளிலும் தொடர்ந்து கொண்டே வருமாதலான் அரிதாகக் கிடைக்கப் பெற்ற மனிதப் பிறவிப் பயனை இழந்து போதல் நன்றன்று. முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினைகளின் பயன் மறுபிறவியில் நம்மைப் பற்றுமாதலான் இனிவரும் பிறவியிலே நமக்குத் துன் பம் அணுகாதபடி இப்பிறவியினிலே நல்வினைகளைச் செய்து

நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளல்வேண்டும். வாழ்க்கை அரம்பும் கரம்பும் நிரம்ப வாய்க்கப் பட்டிருத்தலான் பெருந் துன்பத்திற்கிடமாய இப்பிறவியாலடையும் சிறு சுகத்தை ஒரு பொருளெனக் கருதாது பெறற்குரிய பெரும் பயனை இழத்த லாகாது.

உலகில் மக்களாய்ப் பிறந்த யாவருக்கும் துன்பம் அடுத் தடுத்து வருதலான், உலகியல் மக்கள் ஒருவரோ டொருவர் கூடியும் பிரிந்தும் ஒருங் கியைந்தும் இன்பம் ஒன்றனையே நாடி உவப்பர். இன்பமும் துன்பமும், புணர்வும் பிரிவும், நண்பக லமயமும் இரவும் போன்று வேறு வேறியலவாகி மாறெதிர்ந் துளவென நாம் உணர்ந்தும், இவ்வுலகில் வளம்பட வாழ்வை விரும்பார் யார்? ஒருவருமில்லை. பார்க்குமளவிலே, இவ்வுலகில் துன்பமெனத் தோன்றுவதெல்லாம் உண்மையாகவே இன்பம் பயக்கின்றதாகு மென்றும் துன்பம் உயிர்க் கியல்பன்றெனத் திருவள்ளுவர் 'சுடச் சுடரும் பொன் போலொளி விடுந் துன் பஞ், சுடச்சுட நோற்கிற்பவர்க்கு' என்ற குறளில் குறிப்பாக விளக்கியுள்ளார். 'இன்னாமை யின்பமெனக் கொளினுகுந்தன், னொன்னார் விழையுஞ் சிறப்பு' என்ற பொய்யா மொழிக்கு, ஆசிரியர் பரிமேலழகர் 'துன்பந்தானும் உயிர்க் கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின் அதனை மாறுபடக் கொள்ளவே, அதற்கழிவின்றி மனமகிழ்ச்சி யுடைய னாய், அதனாற் றொடங்கிய வினைமுடித்தேவிடும் ஆற்றலுடை யனுமென்பது கருத்து' எனத் தெரித்த உரை ஈண்டுசிந்திக் கற்பாலதே. இன்ப ஆக்கத்தை அடையவிரும்புவார் எவ்வாறு துன்ப நீக்கத்தைப் பெறுவாரென்பதற்கு திருவள்ளுவர் பல் வகையான் உலகின் உண்மை நிலையறிந்து அருட்புலமை மாட்சி யோடு கூறியது நோக்கத்தக்கது.

(க) அல்ல லருளாள் வார்க்கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங்கரி.

[அருளாகிய துணையுடையார்க்கு இம்மையில் துன்பம் இல்லை.]

(உ) அலாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவா அது மேன்மேல் வரும்.

[ஆசையற்றவருக்கு யாதொரு துன்பமு மணுகா.]

(௩) இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல்.

[ஊழினாலாகிய துன்பத்திற்கு உடல் குறியிடமென்று தெளிந்து துன்பத்திற்கு வருந்தா திருத்தல்.]

[௪] எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்

[அறிவுடையார்க்கு துன்பமும் இல்லை.]

(௫) எதிலார் குற்றம் போற்றங் குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு

[புறங்கூறுவோர் பிறரது குற்றத்தைப்போன்று புறங் கூறுதலாகிய தம்முடைய குற்றத்தைக் காண்பாராயின், அன்னவருக்குத் துன்பமு மணுகாது.]

(௬) 'சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார் தருநோய்'

[ஞானயோகங்களின் முதிர்ச்சியினையுடைய உயிரை சாரக் கடவனவாய் நின்ற துன்பங்கள் சேரமாட்டாமையாற் கெட்டு விடும். 'தன்னைச் சார்வனவற்றையறிந்து அவையிற்றின் சார்பு கெட வொழுகுவனாயின் அவ்வொழுக்கத்தினை யழித்துச் சார் தலைச் செய்யா, சாரக்கடவனவாகிய துன்பங்கள்'—மணக் குடவர்.]

(எ) நோயெல்லாநோய் செய்தார் மேலவாநோய் செய்யார்
நோயின்மை வேண்டுபவர்

[தம்முயிர்க்குத் துன்பமிலாதவாறு விரும்புவோர் ஏனைய வுயிர்க்குத் துன்பஞ் செய்யார்.]

(அ) துன்பமு றவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை

[மெய்ம்முயற்சியில் துன்ப மணுகினும், வினைத்திட்ப முடையார், மனந்தளராது இன்பம் பயக்கும் தொழிலை வலிமை யுடையவராய் புரியவேண்டும்.]

(கூ) இன்ப மிடையறா தீண்டுமவா வென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்

[அவாவில்லாதவர் குறைவிலாத நிறைந்த இன்பத்தை அடைவர். 'பசையற்றால் அன்றே அப்போதே வீடும், அதுவே வீடு வீடாமே'.]

பலவகைப் பிறப்பும் எழுவகைக்குட்பட்டதனால் பிறவா வின்பம் பெற முயலுவார் எழுபிறப்பிலும் காவற்றுணையா யுள்ளனவாகிய நன்மக்கள் பெறுதல், செய்ந்நன்றியறிதல், ஐம்பொறி யடக்குதல், மெய்யுணர்வு கைவரப்பெறுதல் உண்மை நூல்களை ஆராய்ந்தறிதல் முதலியனவற்றைக் கைக் கொள்ளவேண்டும். இதனை பொய்யில் புலவர் கூறுமாற்றான் கண்டு தெளிக.

(க) எழுபிறப்புந் தீயவை தீண்டாபழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

(உ) எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

(ங) ஒருமை யுளாமை போலைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து

(ச) ஒருமைக் கட்டான் கற்றகல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

இஃதொடு நில்லாது திருவள்ளுவரது அறிவுநூல் துன்பம் தோன்றிருக்க, துன்பம் அறிவின் திரிபானதான், அதனை மாறி நினைப்பின் அஃதொழியுமென அறைதலுற்றது. இன்பத் திற்குப் பின் துன்பமும், துன்பத்திற்குப் பின் இன்பமும், நிக ழும் ஒற்றுமையினால் வருதலான், துன்பத்தில் வருந்துதலில்லா தும், இன்பத்தில் மகிழ்தலில்லாதும், அவை காரணமாக

நெஞ்சத்துக் கோடாமையுடனிருத்தல் வேண்டும். இன்பத்தை மதித்து மகிழா திருப்பின் துன்ப மில்லையென 'இன்பத் துளின்பம் விழையாதான் றுன்பத்துட், டுன்ப முறுதலிலன்' என்று தமிழ் மறை புகட்டுவது அறியப்படும் உண்மையே யாகும். பிறவியில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருதலா னும், பிறந்தோருறுவது பெருகிய துன்பமாதலானும், பிறப்புத் துன்பத்தை நீக்க பிறவாமை வேண்டும், இதனை 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமை வேண்டவரும்' என்ற குறட்பா வலியுறுத்துதல் காண்க. பற்றற்ற கண்ணே பிறப்பறுமாதலால், அறிவுடையார் யாவரும் பரம்பரனைப்பற்ற லாய பற்றினைக் கைக் கொண்டு மற்ற பற்றுக்களை அறவே நீக்கவேண்டும். 'பற்றுகபற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு' என்ற ஓரடி முக்காலை ஈண்டு கருத்திற் பதிக்கற்பாற்று. இவ்வாறு பிறவியை நீக்கற்கு இன்பமும் துன்பமு மில்லாதவனாகிய இறைவனது பொன்னடியை மெய் யுணர்வாலறிந்து சார்தல்வேண்டும். இதுபற்றியே

(க) வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
யாண்டு மிடும்பை யில

(உ) தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது

(ந) பிறவிப் பெருங் கடனீந்துவர் நீந்தா
ரிறைவ னடி சேராதார்,

என்று அறிவு நூலியற்ற வந்த திருவள்ளுவர் அருளிச்செய் தனர். இக்கருத்தினை யொட்டியே

'துன்பமே பிறப்பே யிறப்போடு மயக்காந்
தோடக்கேலா மறுத்த நற்சோதீ
யின்பமே வுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'

எனவும் அன்பு நூலாகிய திருவாசகத்தில் மணிவாசகப் பெரு மான் அருளியதையும் நோக்குக. இவ்வின்பமே உயிர்கள் உலகியல் வழாது வாழ்க்கைச் சாக்காடுகைத்தற்கு உறுதுணை யாகும்.

(தொடரும்.)

# திருவிளையாடற் புராண வாராய்ச்சி

E. R. நாசிம்ம ஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

(முற்றொடர்ச்சி துணர் 12 மலர் 6 பக்கம் 201)

இனிப் பரஞ்சோதியார் நூலில் சேனாவரையர் கருத்து காணப்படாமையும் ஓர் சான்றாகும். மதுரைத் திருநகரப் படலத்தில் வணிகர் மறுகைக் கூறுமிடத்து,

"புல்லியோர் பண்டங் கொள்வார் வினவினப்பொரு டம்பக்க
மில்லெனி னினமா யுள்ள பொருளுரைத்தெதிர் மறுத்து
மல்லதப் பொருளுண் டென்னின் விலைசுட்டி யறுத்து நேர்ந்துஞ்
சொல்லிலு மிலாபங் கொள்வார் தொன்மர பிருக்கைச் சொல்
[வாம்"

என்னும் செய்யுளில் நன்னூலார் கூறியுள்ள

"தம்பா லில்ல தில்லெனி னினனு
யுள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே"

என்னும் சூத்திரத்தையாண்டு வணிகர் மாண்பை விளக்கிக் கூறியுள்ளார் "விலைசுட்டியறுத்து நேர்ந்து" என்பதால் நன்னூலார் கருத்தையும் விரித்துக் கூறினாரென்னவுமாம், நன்னூலார் கருத்தும்

"எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனி
னப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறியுள்ள உரையைப் பின்பற்றியதாகும். இளம்பூரணர் உரையில் சொற்கள் வருவித்து வலிந்து பொருள் கொள்ளப்பட்டதென்று சேனாவரையர் இச் சூத்திரத்துக்கு வேறு பொருள் கூறினார். அல்லதில்லதெனும் ஓர்வாய்பாடு கூறுவதற்கு ஓர்விதி வகுக்கப் பட்டதென்று சேனாவரையர் கூறியிருப்பதே பொருந்துமென இலக்கணமறிந்தோர் கூறுவர். பரஞ்சோதியார் சேனாவரைய ருக்கும் முற்பட்டவராதலின் சேனாவரையர் உரையைத் தழுவ

வில்லை யென்பது தெளிவாதல் காண்க. சேனாவரையர் 13-ம் நூற்றாண்டு இறுதியிலிருந்தவராவர். நன்னூலார் 12-ம் நூற்றாண்டிறுதியிலிருந்தவராவர். எனவே பரஞ்சோதியார் 13-ம் நூற்றாண்டிடையில் இருந்தவர் என்பது போதரும்.

இதுகாறுங் கூறியவாற்றால் சேனாவரையர், தொல்காப்பியப் பேராசிரியர், நச்சினார்க்கினியர், இலக்கண விளக்க வாசிரியர், சிவஞானமுனிவர் முதலியோர் கருத்து பரஞ்சோதியார் நூலில் காணப்படாமையும், இளம்பூரணர், நாற்கவிராசநம்பி, நன்னூலார் முதலிய 13ம் நூற்றாண்டுக்கு முற்பட்டோர் கருத்தே பரஞ்சோதியார் நூலில் காணப்படுவதாலும் பரஞ்சோதியாரைப் பிற்காலத்துப் புலவர் என்போர் கூற்றுப் பொருந்தாவுரை யென்பதாம். பெரும்பற்றப்புலியூர் நம்பியார் 13ம் நூற்றாண்டிறுதியில் இருந்தவரென முன்கூறினம். எனவே பரஞ்சோதியார் நம்பியாருக்கு முற்பட்டவராக இருவரும் 13ம் நூற்றாண்டில் திகழ்ந்தவ ராவரென்பது தோற்றமாம்.

பரஞ்சோதியார் புராணத்தின் உரையாசிரியர் புலவர் தோன்றி 280 ஆண்டுகட்கு முன்னரென்று கூறியது ஆராய்ச்சியின்றியும் ஆதரவின்றியும் கூறியதாகும். மணிவாசகனார் காலவாராய்ச்சிக்கார ரொருவர் கடவுண் மாமுனிவருக்கும் பரஞ்சோதியார் பிற்பட்டவரென்றார். இவருரையும் வழுவின்பாற்படும். இவ்விருவரும் ஐயரவர்கள் நம்பியார் நூலை பரஞ்சோதியார் நூலொடு ஒப்புமை கருதிக் கூறினரெனக் கொண்டவராவர். இனி இவ்விரு நூல்களில் காணப்படும் ஒப்புமையாலும் எமது கருத்து வலியுறுவதைக் காட்டுவோம்.

திருஞானசம்பந்தர் மதுரையடைந்து இறைவனை வணங்கினபின்னர் மறுகின் வழியே சென்றகாலை நாயனாரை எதிர்கொண்டழைத்து தமது மடத்தில் தங்குமாறு ஒருவர் வேண்ட அதற் கிணங்கி யவ்விடத்தில் தங்கினரென்று பரஞ்சோதியார்,

"வேண்டுகொண் டருளப்பெற்று மீளுமப்போது கண்டு
மூண்டவைம் போறியுவேன்ற வாசீசமுனிக ளென்ன

ஆண்டுளா ரொருவர்வேண்ட அவர் திரு மடத்திலன்பு
பூண்டெழு காதலோடும் போயினர் புகலிவேந்தர்''

என்னும் செய்யுளில் கூறியுள்ளார். இங்கு நாயனருக்கு தொண்டாற்ற வந்தவருக்கு உதவியாக திருநாவுக்கரையரை சமயத்துக் கேற்ற வுவமை கூறியுள்ள திறன் இன்புறற்பாலது. இந்நிகழ்ச்சி நம்பியார் புராணத்தில், மாற்றப்பட்டு

"இன்னருள்சே ரமைச்சனு ரிடங்காட்டப் போந்தினிய
தொன்னெறிசேர் வாகீசச் சுவாமிமடத் தவதரிப்ப''

என்று கூறப்பட்டுளது. இங்கு வாசீச சுவாமிமடம் ஒன்றிருந் ததாகக் கூறியிருப்பது கால இடர்பாட்டை உடையதாகும். நாயனுர்கள் காலத்தில் நாயனர் பெயர்கொண்ட மடங்கள் ஏற் படவில்லை யென்பதை அறிஞர் அறிவர். இங்குக் கூறிய செய்தி சேக்கிழார் புராணத்தும்

"சித்த மின்புறு மமைச்சனர் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத் தொடுமினி தமர்ந்தார்''

என்பதில் காணப்படு மேனும் வாசீசர் மடம் இருந்ததாகக் காணப்படாதது குறிக்கத்தக்கது. நம்பியார் நூலில் சேக்கிழார் கருத்தும் பரஞ்சோதியார் கருத்தும் ஒருங்கே யமைத்துக் கூறப் பட்டுள்ளது தெளிவாம். சேக்கிழார் காலத்தும் பரஞ்சோதியார் காலத்தும் மதுரையில் இப்பெயர்கொண்ட மடம் இருக்கவில்லை யென்பதும் தெளிவாம். நம்பியார் கருத்துக்கு பரஞ்சோதியார் செய்யுளே அடிப்படையாகுமென்பது தெளிக. இவ்வுதாரணத் தால் நம்பியார் இருநூலையும் செவ்வனே ஆய்ந்துள்ளாரென் பது உணரலாகும்.

பரஞ்சோதியார் கூறும் உவமையை நம்பியார் வேருெரு வகைப்படுத்திக் கூறுவதற்கு மற்ருெரு காரணத்தைக் காட்டு வாம். இறைவன் அட்டாலைச் சேவகன் வேடங்கொண்டு எய்த வம்பு யானையின் மத்தகத்தைப் பிளந்து அங்கே தங்கியிருந்த தோற்றத்திற்கு

வம்புளாய் மலர்ந்த வாரான் வரவிடு மத்தக் குன்றில்
சிம்புளாய் வடிவங் கொண்ட சேவக னேவல் செய்த

வம்புளாய்த் தூணம் விள்ள வன்றவ தரித்தா வாபோல்
செம்புளாய்க் கொடிய நார சிங்கமா யிருந்த தன்றே

என்னும் செய்யுளில் கல்லைப்பிளந்து தோன்றிய நரசிங்கவவதாரத்தை உவமை கூறியுள்ளார். நம்பியார் ஆராய்ச்சியில் சிறந்தவராதலின். இவ்வுவமையை மற்ருேர் வகையாக யானைமலையில் நரசிங்கமூர்த்தி கோயிலொன்று குடையப் பெற்றதென்று சாசனச் சான்று பகரும் வரலாற்றை,

"பாவியர் விட்ட கொற்றப் பருப்பத விபத்தை வீழ
மூவர்க டலைவன் சிங்க முகக்கணை விடுத்த லாலே
காவல னவதா னத்தைக் காசினி காண நண்ணி
மேவரு நரசிங் கத்தை யிருத்தினன் வேழக் குன்றில்"

என்னும் செய்யுளில் கூறியுள்ளார் காண்க. வரகுண மகாராசன் காலத்தில் (8ம் நூற்ருண்டிறுதியில்) மாறன்காரி என்னும் அமைச்சன் கட்டிய கோயிலின் செய்தியை இறைவன் மேலேற்றிக் கூறினர். மற்றும் பரிச்சேவகை இறைவன் வீற்றிருந்த தன்மையைப் பரஞ்சோதிமுனிவர்,

"அண்டமெலா மாதாரமாகத் தாங்கு மானந்த தனிச்சோதி
[யண்டந் தாங்குஞ்
சண்டமறைப் பரிதனக் காதார மாகி தரிக்க வோருகாலத்து
[மசைவிலாத
புண்டகரிகத் தாளசையப் பாச நீங்கும் புனிகரத்தாற்
[பாசம் பற்றிக்
கொண்டரச னெதிர்போந்து மன்னவெங்கள் குதிரை
[யேற்றஞ் சிறிது காண்டியென்ருர்."

என்னும் செய்யுளில் கூறியுள்ளார். இதில் "ஒரு காலத்து மசைவிலாத புண்டரிகத் தாளசைய" என்பது செய்யுளை நிறைக்க வந்ததுபோல் தோன்றுகின்றது. இதன்பொருளைத் தனியே எடுத்துக் காட்டவும் இச்செய்யுள் கருத்துமுழுதும் அமையவும் நம்பியார் இருசெய்யுள் பாடியுள்ளார்.

"அவ்வயி னெங்குந் தானே யாதார மாயிருப்பத்
தவ்வுமோர் கோடகத்தை யாதார மாக்கிச் சால

வெவ்விய மூன்றுபாச மறுக்குமென் காத்து மிக்க
செவ்விய விரண்டு பாசம் பிடிந்தனன் றிறமைகூற''

எனவும்

கருதிடிஞெரு காலத்து மசைந்திடாக் கமலத்தாளே
பரிவொடுங் காணயாரும் பன்முறை யுற வசைத்து
கருமலரயனுன் மாலான் வறையிறு லளக்க வொண்ணுத்
தருமநீ டுருவத்தாணு தாணுவே யென விருந்தான்''

எனவும் பாடியுள்ளதுகாண்க. பரஞ்சோதியார் நூலின் சொற்றொடர்கள் இச்செய்யுளிடத்தும் காணப்படுவதைக் குறிக்க. இவ்விரு நூல்களை ஒப்பிடு மிடத்தும் பரஞ்சோதியார் நூலே முற்பட்டதெனக் கூறவேண்டி யிருத்தல் காண்க.

இனி திருவிளையாடற் புராணங்களை சேக்கிழார் நூலொடும் ஒப்பிடுவாம். சேக்கிழார் தமது புராணத்தில் மங்கையர்கரசியாரும் குலச்சிறை நாயனுரும் சைவ நெறியி லொழுகினதை

"ஓங்கிய சைவ வாய்மை யொழுக்கத்தி னின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டுய்த்தார்''

எனக் கரந்தொழுகினரெனச் சுருக்கமாகக் கூறியுள்ளார். திருவிளையாடற் புராணகாரர்,

"அருந்தமிழ்ப் பாண்டி வேந்தர்க் குறுதியா வாக்கஞ் செய்யும்
மருந்தினிற் சிறந்த கற்பின் மங்கையர்க் கரசி யாரும்
பெருந்தகை யமைச்சு நீரிற் குழைத்தன்றிப் பிறங்கப் பேறு
தருந்திரு நீறி டாராய்ச் சிவனடிச் சார்பி னின்ருர்''

எனப் பரஞ்சோதியாரும்,

"அனைவரும் புலத்துப் போந்தீ தென்கொலென் றலையக் கண்டு
புனிதநீ றணியா தஞ்சி புனல்கொடு நீறு சாத்து
மனமுடை மானி யாரும் மந்திரித் தலைவ ருை
நினைவறிந் திருந்து சொல்வார்............................''

என நம்பியாரும் நீரை நீருக வணிந்து சைவ நெறியிலொழுகினரென ஓர் அழகுபடக் கூறியிருத்தல் காண்க. திருவிளையாடற் புராண காரரில் ஒருவர் மற்ருெருவர் கருத்தைத் தழுவினரென்பது புலப்படும். இருவரும் சேக்கிழார் கருத்தை விரித்துரைக்

கவும் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் இருவர் மனத்திட்பத்தையும் அறிவிக்கவும் ஆசிரியர் கொண்ட உபாயம் வியக்கற்பாலது. திருஞான சம்பந்தர் பாண்டியன் வெப்புத் தீர்க்க முயன்றபோது சமணர் யாதொரு தடையும் எழுப்பினதாக சேக்கிழார் கூறவில்லை. இதனை

"அன்னவன் வலப்பால் வெப்பை ஆலவா யண்ணல் நீறே
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப தென்று"

என்னும் அடிகளில் கூறியுள்ளது காண்க. நோயுற்றவர் பிணி நீங்குவதற்கு திருநீறெடுத்து சாத்தும்போது இறைவனீறெனக் கூறும் வழக்கை நாயனாரும் அனுசரித்து தாங்கையில் கொண்ட நீறு ஆலவாய்ப் பெருமான் நீறெனக் கூறியதில் ஓர்பொருள் பொதிந்திருப்பதாகத் திருவிளையாடற் புராணகாரர் கூறுந் திறன் பாராட்டற்பாலது. நாயனார் தம் பையிலிருந்த நீறை எடுத்தபோது சமணர் தடுத்ததாக,

"தீயர் மானமிக் குடையராய்ச் செருக்கழிந் திருப்ப
பாய கேள்வியோர் புண்ணியப் பையுணீ றள்ளிக்
காய நோயது தணித்திடக் கருதின ரதனை
மாய நீறென விலக்கினர் மாயை செய் தழிவார்"

என்றுகூறித் தடுப்பதற்குநாயனார் கையிலுள்ளநீறு ஓர்வஞ்சனையுடையதென வோர் காரணத்தை பரஞ்சோதியார் கற்பித்தார். இதன் கருத்தாவது நாயனார் இளம்பிள்ளையானதால், இவரிடத்து நோய் தீர்க்குந் திறனில்லை; பிறர் யாரோ மந்திரித்தனுப்பிய நீறை நாயனார் பையில் கொண்டுள்ளாரெனக் கருதினரென்பதாம். இக்கற்பனையை,

"மண்டழுன் மாற்ற வல்லையேல் மாற்று யாற்றுநின் வழிகளைக் [கொண்டே
பண்டைநின் கரத்துக் கொண்டநீ றாகா பகை மருந்திட்ட [நீறின்று
கண்டிடிற் சென்னி மண்டலத் தவனீ யென்று முன்கண்டது [விலக்க
முண்டகவதன மழகெழச் சிறிது முறுவல் கொண்டுரை [செய்வர் முனிவர்"

என நம்பியாரும் பின்பற்றி வேறுமோர் காரணம் கற்பித்துக் கூறுவார். இவ்விளம்பிராயத்தான் பகை யரசனை சென்னி நாட்டினின்றும் வந்தவனாதலின் அரசனுக்கே தீங்கு விளைக்கக் கூடுமெனக் கூறியுள்ளது அரசன் சமணர் சூழ்ச்சிக் குடம்படுவா னென்னும் திறத்தைக் காட்டுவது காண்க. இங்கு எடுத்துக் காட்டிய திட்டாந்தங்களால் சேக்கிழார் கருத்தை திருவிளை யாடற் புராணகாரர் ஆராய்ந்துள்ளதும், பரஞ்சோதியார் கருத்தை நம்பியார் பின் பற்றியதும் தெளிவாம்.

இதுகாறுங் கூறியவாற்றால் பரஞ்சோதியார் நூலும் நம்பியார் நூலைப்போல் பழமை வாய்ந்த தென்பது உணரக் கூறினும். பரஞ்சோதியார் நூலும் நம்பியார் நூலுக்கு முற் பட்ட தென்பதும் போதரும்.

இனி நம்பியார் புராணம் பழைய திருவிளையாடல் என்னும் பெயருண்டென்பதன் காரணத்தை யாராய்வாம். நம்பியார் நூல் உத்தர புராணமென்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பாகும். உத்தரபுராணம் இதுபோது வழக்கினின்றும் வீழ்ந்ததெனினும் நம்பியார் நூலில் வடமொழி நூலின் கருத்து முழுதும் அமைந்துள்ள தென்பதற் கையமில்லை. இந்நூலை ஆலாசியத்தோடு ஒப்பிடும் போது ஆலாசியத்தில் மூர்த்திநாய னார் வரலாறும் காரிநாரியார்ப் பாப்பகுத்ததும் நீக்கப்பட் டுள்ளன. இதில் கதைகளின் வைப்பு முறையும் சிறந்து விளங் கும்; முன்னை நூலில் கூறப்பட்ட 62 திருவிளையாடல்களையே மாற்றி 64 ஆக ஆலாசிய மகாத்துமியத்தில் கூறப்படும். இத னல் ஆலாசியம் பிற்பட்ட நூலென்பது தெளிவாம். இது புதிய திருவிளையாடலாகவும் உத்தர புராணம் பழைய திருவிளையாட லாகவும் கருதப்பட்டதென்பது போதரும். இதனை

"அம்பதுமத் தார்ச்செல்வி யாண்டான் கவுணியர்கோன்
நம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியந்—தெம்பெருமான்
ஆதிவிளை யாட லறுபத்து நான் கினையு
மோதி முடித்தா னுவந்து"

என்னும் சிறப்புப் பாயிரத்தினும் நம்பி நூலில் கூறப்பட்ட அறுபத்து நான்கு திருவிளையாடல் பழையதெனப் பட்டதையறிக. பழைய திருவிளையாடல் என்றது திருவிளையாடல் வரலாற்றைக் குறிப் பதே யாகுமென வறிக. நம்பியார் நூலின் தொன்மையைக் குறித்த தன்றென்பதை கருத்தில் இருத்துக.

# இயைபு நூல்

திரு. A. சீனிவாசாச்சாரியார் B.A., L.T.,
ஆசிரியர் இந்து உயர்தரக் கல்லூரி சீவில்லிப்புத்தூர்

## 2. இயன் மாற்றமும் நிறையும்.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 7. பக்கம் 268)

பொருண்மையும் நிறையும். எப்பொருட்கும் நிறை உண்டென்று முற்கூறினம். இந்நிறைக்குக் காரணம் யாது? ஒரு சிறு இரும்புக் கட்டியினும் பெரிய இரும்புக் கட்டியொன்றில் பொருள் மிகுதியாயிருத்தல் வெளிப்படை; இத்தன்மையைப் 'பொருண்மை' யென்போம். உலகத்துள்ள பொருள் ஒவ்வொன்றையும் நிலம் தனது மையத்தை நோக்கி இழுக்க முயலுதலின், ஒவ்வொருபொருட்கும் நிறையென்பது உண்டாகின்றது. ஆதலின் பொருண்மை வேறு, நிறைவேறு. ஒருபண்டத்தில் அடங்கிய பொருளின் அளவே பொருண்மையாகும். நிலக்கவர்ச்சியின் பயனாய்த்தோன்றும் 'நிறை' அல்லது 'கனம்' பொருண்மைக்குத் தக்கவாறு வேறுபடுகின்றது; அன்றியும், பொருண்மை வேறுபடாத போதும், பொருண்மை மிகினும், குறையினும், அப்பொருளின் நிறை (முறையே) மிகுந்தும் குறைந்தும் வரும். ஒரு பொருளை ஒருதுலையின் ஒருதட்டில் வைத்து மற்றொன்றில் எடையிட்டு நிறுப்பதனால், அதன் பொருண்மையை நேராக அறிய இயலாது, அதன் நிறையே அறியப்படுவதாகும். பொருண்மையையும் (நிறுக்கும் இடத்திலுள்ள) நிலக்கவர்சியையும் பெருக்கிவரும் தொகையே நிறையாகும். ஆதலின் எவ்விடத்தும் யாதேனும் ஒருபொருளின் நிறைக்கும் அதன் பொருண்மைக்கும் உள்ள ஈவுமாறுதாகலின், சமநிறையுள்ள இரு பொருள்கள் சமபொருண்மையுள்ளன வாதல்வேண்டும். அன்றியும், ஓரிடத்துப் பொருளின் நிறைமாற்றம் காணப்படுமேல், அதன் பொருண்மை மாறுபட்டதாக அறிதல்வேண்டும்.

**இயன்மாற்றத்தில் நிறைமாற்றம்.** பொருள்கள் இயன் மாற்றம் அடையுங்கால் அவைகளின் பண்புகள் மாறுமெனக் கூறினேம்; அவைகளின் நிறைமாறுகின்றதா என்பதை இனி ஆராய்வோம்.

**நிலவியம்** போன்ற சிலபொருள்கள் எரிந்த பின்பு சாம்பர் எஞ்சுகின்றது; மெழுகுவத்தி சந்தகம் போன்ற சிலபொருள்கள் எரிந்தபின்பு ஒன்றும் எஞ்சுவதில்லை. இதனால் எரியும் பொருள்கள் அழிவடைகின்றனபோல மேலெழுந்த பார்வைக்குத் தோன்றுகின்றது. ஆனால் நிலவியம் எரியுங்கால் ஒரு வெண்புகை வெளியேறுவதும், கந்தகம் எரியுங்கால் நாற்றமுள்ள ஓர் ஆவிகிளம்புவதும், முறையே காட்சியாலும் மோப்பத்தாலும் உணரப்படுகின்றன. ஆதலின் ஒருபொருள் இயன் மாற்றமடையுங்கால் அதன் நிறைமாற்றமடைகின்றதா என்பதை ஆராய்தற்பொருட்டு, அது எரியும்போது தோன்றும் எல்லாப் பொருள்களின் நிறையையும் சேர்த்துக் கணக்கிடுதல் வேண்டும்; இரண்டு சோதனைகளால் இதை அறிய முயல்வாம்.

ஒரு சிறிய குகைக்குள் மெல்லிய **நிலவியத் தகடுகளின்** துண்டுகள் சிலவற்றையிட்டு மூடியால் மூடி இரண்டையும் நிறுத்து, மூடியவண்ணமே குகையை **எரியுமிழ்அடுப்பினாற்** சூடாக்கி, அதன் அடி செந்தணலானபின் மூடியை இடையிடையே சற்றே உயர்த்தி உடனேமூடுக. உயர்த்துங்கால், வளி உட்புகுமாறும் நிலவியப்புகை வெளியேறாதவாறும் உன்னிப்பாய்ச்செய்க. இவ்வண்ணம் செய்வதால் **நிலவியம்** முழுதும் எரிந்து வெண்மையான சாம்பராகும். குகை ஆறியபின், மூடியோடும் சாம்பரோடும் அதனை நிறுக்கின், சாம்பரின் நிறை **நிலவியத்தின்** நிறையினும் மிகுந்திருத்தல் புலப்படுகின்றது

ஒரு கண்ணாடிக் **குழல்உருட்டின்** (Cylinder) அடியிற் பொருத்துதற்கேற்ற ஒரு தக்கையின்மீது சிறியதோர் மெழுகுவத்தியை நிறுத்தி, அத்தக்கையில் வளிபுகுமாறு பல துளைகளையிட்டு, உருட்டின் அடியை அத்தக்கையால்மூடிவிடுக. உருட்டின் மேற்பகுதியில் ஒரு கம்பிவலையைச் செருகி, அதன்மீது **உவரி**

யக்காரக் கழிகளை (Sticks of Caustic soda) நிரப்புக. தக்கையை வெளியிலெடுத்து வத்தியை எற்றி, மீண்டும், அதனைப் பண்டுபோல் அமைத்து, உருட்டினை ஒரு துலையின் இடப்புறத் தட்டின்மேல் கொக்கியினினின்றும் தொங்கவிடுக. வலப்புறத் தட்டில் சமன் எடையாம் வண்ணம் நிறைகளை இடுக. வத்தி எறிய எறிய, வத்தியுள்ள தட்டு தாழ்ந்துவரக் காணப்படுகின்றது. வத்தி எறியுங்கால் எழும் ஆவிப் பொருள்களனைத்தையும் உவரியக்காரம் உள்ளிழுத்து அடக்கிக் கொள்ளும் பண்பினதாகலின், வத்தி நிறையினும் வத்தி எறியும்போது தோன்றும் பொருள்களின் நிறை மிக்கிருப்பது வெளிப்படுகின்றது.

இவ் இருசோதனைகளானும், இயன் மாற்றத்தால் விளையும் பொருள்களின் நிறை அம்மாற்றமடையும் பொருளின் நிறையினும் மிகுதல் காணப்படுதலின், இயன்மாற்றத்தால் ஒரு பொருள் அழிவடைவதன்றி ஆக்கமுறுகின்றதோ என்று ஐயுறற்கிடனாகின்றது. ஆனால் ஒருபொருள் எரிதற்கு இன்றியமையாத்துணையான வளியினை இருசோதனைகளிலும் உட்புகவிட்டிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது. ஒருக்கால் இரண்டிடத்தும் கண்ட நிறைமிகுதிக்கு உட்புகுந்த வளியே எதுவாயிருத்தலும் கூடும். ஆதலின் இவ் ஐயப்பாட்டை ஒழித்தற் பொருட்டு, அடைபட்ட இடத்தின்கண் இயன்மாற்றத்தை நிகழ்வித்து, அதன் முன்னும் பின்னும் பொருள்களின் நிறையினைக் கணக்கிட்டு ஒப்பிடல் வேண்டற்பாலதாகின்றது. இதற்கென வேறிரண்டு சோதனைகள் செய்யலாம்.

அழுக்கற்ற உலர்ந்த உண்டைக்கூம்பி (Round-bottomed flask) யொன்றிற்குள் ஒரு சிறு மஞ்சள் எரியத்துண்டை (வடிதாட்கிடையே வைத்து அழுக்கி உலர்த்தியபின்) இட்டு அக்கூம்பியின் வாயைத் தக்க அடைப்பானாற் காற்றுப்புகாத வண்ணம் அடைத்துவிடுக. அதனை ஒருதுலையில் வைத்து, அதன் நிறையை உன்னால் இயன்றவரை நுணுக்கமாகக் கண்டுபிடி. பின் அக்கூம்பியின் அடியை வெந்நீரிற்குள் அமிழ்த்திப் பிடி. எரியம் எரியத் தொடங்கியதும், கூம்பியை வெளியே

எடுத்து, அணையும் வரை ஒருவிரலால் அடைப்பானை அழுத்திக் கொண்டிரு. கூம்பி ஆறியதும், அடிப்பீரத்தைத் துடைத்து மீண்டும் அதன் நிறையைக் காண்க. நிறை முன்னர்க் கண்ட நிறையினும் வேறுபடாதிருத்தல் புலப்படும். பின்னர்க் கூம்பியைக் குப்புறக் கவிழ்த்தி, அதன் வாயை ஒரு கலத்தினுள்ள நீர்க்குள் ஆழ அமிழ்த்தி, அடைப்பானை நீக்குக. அப்போது நீர் கூம்பிக்குள் ஒரெல்லைவரை ஏறுகின்றது. இதனால் கூம்பியில் அடைபட்டிருந்த வளி, எரியம் எறிந்ததன் பயனாய், ஒரு பகுதியை இழந்து நிற்றல் அறியக் கிடக்கின்றது; ஆயினும் கூம்பியின் முழுநிறை மாறுபடாமையின், எரியத்தினின்றும் எழுந்த வெண்புகை எரியத்தினும் நிறை மிகுதல் இன்றியமையாதது என்பதும் பெறப்படுகின்றது.

அழுக்கற்ற தட்டைக்கூம்பியொன்றினுள் 20 கன சதிமீட்டர் (20 C. C.) உணவுப்புக்கரையத்தை ஊற்றி, வெள்ளிவேடியிகக் (Silver nitrate) கரையமடங்கிய ஒரு சிறு சோதனைக் குழாயையும் கூம்பிக்குள் வேறாகவைத்து, கூம்பியின் வாயைத் தக்க அடைப்பானால் இறுக அடைத்துவிடுக. கூம்பியின் நிறையைத் துலையினாற் கண்டறிக. பின்னர், கூம்பியைச் சாய்த்து, இரு கரையங்களையும் கலக்குமாறு செய்க. இரண்டும் இரட்டைமுறிவு என்னும் இயன்மாற்றத்திற்குள்ளாக, வெண்படிகை (Precipitate) பொன்று (வெள்ளிப்பசியை—Silver Chloride) தோன்றுகிறது. மீண்டும் கூம்பியின் நிறையைக் கண்டறிக. நிறைபண்டுபோல் இருப்பதன்றி மாறுபடுவதில்லை.

இவ் இருசோதனைகளும் புலப்படுத்தும் ஓர் உண்மை யாதெனின், ஒரு பொருள் அடைபட்ட இடத்து இயன்மாற்றமடையுங்கால், இயற்மாற்றத்திலே தொடர்புற்ற அனைத்துப் பொருள்களின் மொத்தநிறை மாற்றத்திற்கு முன்னும் பின்னும் ஒன்றேயாம் என்பது. அப்பொருள்களில் யாதேனும் ஒன்றின்நிறை மாற்றத்திற்குப் பின் முன்னினும் குறைந்து காணப்படின், அதனொடும் தொடர்புற்ற மற்றொன்று மாற்றத்திற்குப் பின் அதேயளவிற்கு நிறை மிகுந்திருத்தல் வேண்டும்;

அன்றேல், மொத்த நிறை மாறுமை பொருந்தாது. பலமுறை பல அறிஞர்கள் பல்வகைப் பொருள்களைத் துணைக் கொண்டு முற் கூறிய உண்மையை ஆயந்தவிடத்தும், கோடியில் ஒரு கூறேனும் நிறை மிகினும் குறையினும் அதனையும் தெளிய எடுத்துக் காட்டும் நுண்கருவிகளைப் பயன் படுத்திய விடத்தும் சோதனை பிழை யளவிற்கே வேறுபாடு காணப்படுவதாயிற்று. ஆதலின் "இயன்மாற்றம் நிகழும்போது, மாற்றத்தில் தொடர் புறும் எல்லாப் பொருள்களின் மொத்த நிறை (அல்லது பொருண்மை) மாற்றத்தினால் விளையும் பொருள்களின் மொத்த நிறை (அல்லது பொருண்மை)க்கு இணையாகும்" என்ற உண்மை நிலை நாட்டப்பட்டதாயிற்று. இது 'பொருண்மை அழியாமை'யென்னும் முறைமை (The law of conservation of Mass) யெனப் பெயர்பெறும். ஒரு பொருளின்கண் நிலை மாற்றம் நிகழும்போதும் இது பொருந்தும். இம்முறைமை யைப் பொருளழியாமை முறைமை யென்னலும் உண்டு; உலக முழுமையிலும் உள்ள பொருள்களின் மொத்த அளவு, எப் பொருள் எம்மாற்ற மடையினும், மாறுபடாது என்பதே இதன் பொருளாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் லவாய்சியே என்னும் பிரெஞ்சு அறிஞர் நடாத்திய தொடர்ந்த ஆராய்ச்சியின் பயனாக நிறுவப்பட்ட நிறையழியாமையென்னும் இம்முறைமை இயைபுநூற்கு அமைந்த அடிப்படைக் கல்லாகும். இது பொய்க்குமாயின், இயைபுநூற் புலவர் இன்னின்ன மாற் றத்தால் இன்னின்ன பின்னர் விளையும் என்பதை முன்னுணர மாட்டாதவராவர்; அன்றே இயைபுநூல் அழிந்துவிடும்.

**இயன் மாற்றத்திற்குக் காரணம்.** பளிதனக் (Platinum) கம்பியொன்றைச் சூடாக்குங்கால் அது இயன்மாற்றமடைவ தில்லை; ஆனால் நிலவியக்கம்பியைச் சூடாக்குங்கால் அது புதிய தொரு கூட்டுப் பொருளாக மாறுகின்றது. இவ்வேறு பாட் டிற்குக் காரணம் யாது? நிலவியத்திற்கும் வளியின்கண் அமர்ந் துள்ள உயிரியத்திற்கும் (Oxygen) ஒன்றோடொன்று இயைந்து ஒன்றுவதிலுள்ள ஒருவகைக் கவர்ச்சியே அதற்குக் காரணம்

என்னலாம். இக்கவர்ச்சியை இயைபுக் கவர்ச்சி என்ப (Chemical affinity). நிலவியம் சூடாகும்போது இவ் இயைபுக் கவர்ச்சி வெளித்தோன்றுகின்றது என்னலும் இயைபு நூலறிஞரது மரபு. பளிதனத்திற்கும் உயிரியத்திற்கும் அத்தகைய கவர்ச்சியின்மையே அதன்கண் இயன்மாற்றமின்மைக்கு ஏதுவாகும். இரச உயிரி (Mercuric Oxide) யிலுள்ள இரசமும் உயிரியமும் இயைபுக் கவர்ச்சிக்கு வயப்பட்டு இணைந்தொன்றா யிருத்தல் பற்றியே, அச்சத்தியைவென்று இரண்டையும் பிரித்தற் பொருட்டு இரசஉயிரியை உயர்ந்த அனற்பதனெய்தும் வரை சூடாக்குதல் இன்றியமையாத தாகின்றது.

இயன் மாற்றத்தின் சிறப்பியல்புகள். (1) இயன்மாற்றத்தின் பயனாய்ப் புதிய பண்புகளையுடைய புதுப்பொருள்கள் தோன்றும். (2) இயன்மாற்றம் நிகழும்போது, இயன்மாற்றத்தின் பயனாக விளையும் பொருள்களின் மொத்தநிறை அம்மாற்றத்திற் கலந்து கொள்ளும் பொருள்களின் மொத்த நிறைக்கு இணையாகும். (3) இயன்மாற்றம் நிகழும் போதெல்லாம் அனல் உட்கொளப்படும், அன்றி வெளிவிடப்படும். (4) பொருள்கள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருந்தாலன்றி இயன்மாற்றம் நிகழாது. (5) இயன்மாற்றமடையும் பொருள்கட்குள் ஒரு குறிப்பிட்டநிறை வீதப்படியே இயன்மாற்றம் எப்போதும் நிகழும். கூட்டுப்பொருளொன்றை எம்முறையிற் பெறினும் அதன் நிறைவகை இயைபு (Gravimetric Composition) என்ஞான்றும் மாறாததாகும்.

---

# கருவிலே வாய்த்த திரு

பண்டிதர். திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்,
தலைமைத்தமிழாசிரியர், உயர்தரக்கல்லூரி, திருவோத்தூர்

உலகில் மக்கள் பலவேறுவகையான செயல்களைச் செய்கின்றனர். ஒருசிலர் தாம் செய்ய வேண்டியவற்றைப் பிறர்துணையின்றி தாமாகவே நினைந்து செய்கின்றனர்; ஒருசிலர், பிறர்துணை கொண்டு செய்கின்றனர்; வேறுசிலர் பிறர் ஏவல் வழிநின்று, அவர் காட்டக் கண்டு செய்கினர். செய்வோர் திறம் இதுவாக, செயப்படுபொருள்கள், ஒருசில யாவராலும் மதிக்கத்தகுவனவாகவும், ஒருசில வியக்கத் தகுவனவாகவும், வேறு சிலவியப்பும் மதிப்பும் இலவாகவும் இருக்கின்றன. யாவராலும் வியக்கத் தகும் செயப்படுபொருள்கள் தாமும், பிறர் துணையின்றி ஒருவரால் தனிமையிற் செய்யப்படின், செய்தவரது அறிவுமாண்பும் கருவிமாண்பும் பிறவும் வியப்போரால் நினைத்துப் பாராட்டப் படுகின்றன. இவ்வாறு பாராட்டப்பெறும் தக்கோரது செயலின் சிறப்பியல்பினை ஆராய்ந்து உண்மை காண முயல்வோர் சிலரே; அத் தக்கோரது தகவு **கருவிலேயே வாய்த்ததிரு** என்று கூறியமைவோரோ பலர். உண்மைகாணும் அறிவுரம் பெற்ருரும் உயர்ந்தோர் ஒருவர்பால், நிகழும் வினையாற் பிறக்கும் செயப்படுபொருள்கள், உயர்ந்தோர் பலரும் உவந்துபாராட்டத் தக்க நிலையில் நிற்ப. அவற்றைகாணுங்கால், அவர்பால் அச் செயற்குறிய தளர்ச்சியும், சோர்வும் புலனாகாமை கண்டவிடத்து, "இன்னோரன்னவற்றைச் செய்வது இவர்கட்கு எளிதன்று; இச் செயல்வன்மை இவர்கட்குக் **கருவிலேவாய்த்த திரு**", என்கின்றனர். எனவே, செயற்கரிய செய்யும் பெரியார்பால், அரிய செய்கை யொன்று நிகழ்ந்த விடத்து, செயலருமை காணும் சிறப்புடைய மக்கள், அச்செயலின் சிறப்புத் தோன்ற, "**கருவிலே வாய்த்த திரு**" என்ற தொடரைச் சிறக்கக் கூறிப் பாராட்டுவர் என்பது விளங்குகிறது.

கருவிலே வாய்த்ததிரு என்ற தொடருள், கருவென்பது பிறப்பையும், திருவென்பது சிறப்பையும் சுட்டிநிற்கின்றன.

கருவாய்க்கிடந்து உருவு சிறந்து பிறவி பெறுதல் உயிர்கட்கு இயல்பு. ஆதலால், இத்தொடரும் உயிருடைப் பொருளையே சுட்டி வருதலுடையதாகும். மேலும், திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை யென்பவாகலின், ஒருயிரிடத்து, கண்டாரால் விரும்பிப் பாராட்டப்பெறும் செயற் சிறப்புத் தோன்றினும், அதுதானும், எல்லாவுயிர்க்கும் பொதுவாய் அமையாது, சிலவற்றின்பால் சிறப்பாய் அமைந்து தோன்றினும், அச்சிறப்பும் அமைதியும் ஒருங்க விளங்குதற்கு, கருவிலே வாய்த்த திரு என்ற சொற்றொடர் அழகுற வழங்கப் பெறும்.

மனிதவுயிர் மண்ணிற் றோன்றிப் பலநாள் கழித்த பிறகே தனக்குறியவற்றைத் தானே தேடிச் செய்வன செய்யும் திறம் பெறுகிறது. ஏனைமாக்களுட் சிலவும், புள்ளினத்துப் பலவும் பிறக்கும்போதே, தாம் வாழும் இடம், காலம் முதலியவற்றின் நிலைக்கேற்ப, வினையறிவும், வினையினை ஆற்றற்குறிய திட்பமும் பெற்றுத் திருவுடையவாய் விளங்குகின்றன. ஏனைவுயிர்களை நோக்கப் புள்ளுயிர்கள், சில இயல்புகளைக் கருவிலேயே திருவுறப் பெற்றிருத்தலை நாம் நாளும் காணலாம். இவற்றின் திருவுடைமையினை ஆராய்ந்து கண்ட மில்ட்டன் மேக்காயி (Milton Mackaye) என்னும் அமெரிக்க நாட்டு அறிஞர் கூறிய செய்தியினை ஈண்டுத் தமிழில் எழுதுகின்றேன்:

ஆஸ்திரேலியாவில் ஒருவகை வான் கோழிகள் வாழ்கின்றன. அவற்றைத் தர்மா மீட்டர் (Thermometer) பறவை யென்று அங்குள்ளவர் கூறுகின்றனர். அவை ஆணும் பெண்ணுமாகக் கூடிவாழும் அமைதியுடையவாகும். அவை கூடமைக்கும் முறை மிக அழகிது. அவற்றுட் பெண்கோழி முட்டையிடுதற்குரிய காலம் நெருங்குகையில், ஞாயிற்றின் வெயில் உறைப்பதும், மணற்பாங்கானதுமான ஓர் இடத்தைக் கண்டு, ஓரடியாழமுள்ள குழியொன்றைச் செய்யும். பின்பு, அதனுள் சருகும் புல்லும் கொணர்ந்து பெய்து, அவை வெயிலாலும் மழையாலும் உறைபட்டு மட்குவிக்கும். அவை மட்கத்தொடங்குங்கால், அக்குழியின்மேல் தன் கூட்டினைக் கட்டத்தொடங்கும்.

சேவற்கோழியும், அச்செயற்குத் தன்னின் இயன்ற உதவி யினைச் செய்கின்றது.

இக் கோழி யமைக்கும் கூடு மூன்றடி உயரம் பெற்று வட்டமாக சமைந்து நிற்கிறது. இதன் குறுக்களவு (Diameter) நான்கடியாகும். கூட்டின்புறம் குச்சிகளாலும் சிறுசிறு கொம்பு களாலும் சன்னல் பின்னலாகத் தொடுக்கப்பட்டுளது. மேலும், இது, மிக்க வன்மை யுடையதாகலின், காற்றிற்கும் மழைக்கும் பிறவற்றிற்கும் சிறிதும் தளர்வுறுவதும் இல்லை. இத்துணை வன்மையுறக் கட்டப் பெற்ற இக்கூடு முடிவு பெற்றதும், இப் பறவைகள், இதன்கண் வந்து தங்குவதில்லை. ஆறுநாட்களோ, ஒன்பதுநாட்களோ கழிந்தபிறகுதான், இச்கூட்டிற்குவரும்.

வரும்போது பெண்கோழி, புறத்தே வழியொன்று செய்து கூட்டின் உட்புகுந்து முட்டை யொன்றையிடும். பின்பு, அதனை மூடி விட்டுச் சேவலோடு நீங்கிவிடும்; மறுபடியும் மூன்று நாள் கழித்தே கூடுநோக்கி வரும். வரும்போதும், அது, முன் போலவே, குழிசெய்து, உட்புகுந்து ஒரே முட்டை யிட்டுவிட்டு நீங்கிவிடும். இவ்வாறு அது, மூன்று நாட்களோ, நான்கு நாட் களோ, இடையிட்டு இடையிட்டு, பதினன்கு முட்டைகளை இடும். அதற்குமேல், பெண்கோழி முட்டையிடுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறு பதினன்கு முட்டைகளும் இடப்பட்டவுடன், அக்கோழி, அக்கூட்டிற்குள் நுழையாமல், புறத்தே தான் செய்த வழியையும் மூடிவிடுகிறது. அதனல், கூட்டின் உட் புறத்தே புழுக்கம் உண்டாகிறது; வெப்பமும் மிகுகின்றது. முட்டைக்குத்தொண்ணூறு திகிரி (Degree)யளவுள்ள வெப்பமே வேண்டப்படுகிறது. கூட்டின் அகத்தேநிலவும் வெப்பம் அவ்வள வில் மிகுமாயின், அதனைத் தாய்க்கோழி எவ்வண்ணமாகவோ தெரிந்து கொண்டு, புறத்தே வழியொன்று செய்து, அதன் வழியாகக் குளிர் காற்று உள்ளே செல்லவிடுகின்றது. மிக்குற்ற வெப்பம் அத்தொண்ணூறு திகிரிக்கு இறங்கியதும், குளிர்

காற்று நுழைந்து, மேலும் இறங்காதவாறு தாய்ப்பறவை தடைசெய்து விடுகின்றது. இவ்வாறு, கூட்டகத்தில் தொண்ணூறு திகிரி யளவுள்ள வெப்பமே நிலவுமாறு செய்யும் இத் தருமாமீடர் பறவையின் வித்தகம் நினைக்குந்தோறும் வியப்புத் தருகின்றது.

இவ்வகையில் சுமார் நாற்பத்தைந்து நாட்கள் சென்றதும் முட்டைகள் பொரிக்கின்றன. குஞ்சுகள் வெளிப்பட்டு, அக் குழியிலிருந்து மண்வழியே மேலேறி வெளிவருகின்றன. தாம் இருக்குமிடத்து வெப்பம் தமக்குப் போதாதென்று அக்குஞ்சுகள் வெளிவந்து விடுகின்றன என்பர். இவ்வாறு தன்னைச்சுற்றி நிலவும் காற்றினது வெப்பநிலையை அளந்து காண்டலும், ஓரளவிலேயே வெப்பநிலையை நிறுத்திக் கொள்ளலும் ஆகிய இச் செயல்கள், மக்களுள், இயற்கை நூற்புலவர் பெருமக்களுள் சிறந்தவர்க்கும் எளிதில் முடியாதனவாக இருக்க, இவற்றைச் சிறு வருத்தமும் முயற்சியும் கருவியும் பிறவுமின்றி, இவ்வாஸ்திரேலிய வான்கோழிகள் செய்துகொள்ளும் திறம் இவற்றிற்கு கருவிலேயே வாய்த்த திரு என்று கொள்ளவேண்டும்.

நம் தமிழ் நூல்களில், புள்ளினங்களை அறிஞர் ஐயறிவுயிராகக் கொண்டுளராயினும், இவற்றிற்கு மனவுணர்வு உண்டென்ற கூறுவதிலர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் "மாவும் மாக்களும்" என்றற்றொடக்கத்து விதிகளால், பறவைகட்கு மனவுணர்வு இன்மை தோன்றவே கூறினர். மற்று, மேனாட்டு மக்கள் பலரும் புள்ளினங்கள் நுண்ணறிவுடையவென்றே கருதி வந்தனர். உயிர்நூற் புலவர்கள், ஆண்டுதோறும், இவற்றின் குணஞ்செயல்களை ஆராய்ந்து கொண்டே வருகின்றனர். அவர்கள், "புள்ளினம் நுண்ணுணர்வுடையவென்றல் உண்மையன்று; அவற்றிற்கு நினைத்தல் என்ற செய்கையே கிடையாது; நினைக்கவேண்டிய நியதியும் அவற்றிற்கு வேண்டா; அவற்றின் உயிர்த் தன்மையே (Instinct), அவை செய்தற்குரிய செயற்பன்மைக்காகிய செம்மை நெறிக்கண் அவற்றைச் செலுத்துகிறது," என்றே கூறுகின்றனர். அமரிக்க நாட்டு நியூயார்க்

நகரத்தில், உயிராய்ச்சிக்கழகம் ஒன்று உளது. அங்கு உயிராய்ச்சிப் புலவர்களுள் தலைமைப் புலமை நடாத்தும் ராபர்ட் குஷ்மான் மர்பி* என்பார் பின் வருமாறு கூறுகின்றார்:

புள்ளினங்களுள் உயர்வுடையன எனக் கருதப்படும் கிளியும், காக்கையும், பிற இன்னிசைப் பறவைகளும் நினைத்தற்குரிய மனப்பொறி, மிகச் சிறிதே யுடையவாகும். சிறு புழுக்களுக்குரிய மனப்பொறியும், இவற்றின் மனப்பொறியும் பெரும்பாலும் ஒத்திருக்கும். ஆயினும், உயிர்த்தன்மையினையே (Instinct) உணர்வுக் கருவியாகக் கொண்டு, செய்வன செய்து, உயிர்வாழும் புள்ளினங்கள், பல அரிய செயல்களைக் காரணம் தேராமலே, செய்து வருகின்றன. ஒரு செயலைச் செய்தல் வேண்டும் என்றெழும் உயிர்க்கிளர்ச்சியும், செய்கையாற் பிறக்கும் அமைதியும் ஒன்றையொன்று இன்றியமையாது தொடர்புற்றிருக்கின்றன.† அத்தொடர்புக்குரிய உயிர்ப்பண்பே, பறவைகளின் அருஞ்செயற்குப் போதிய ஏதுவாகின்றது; எவ்வகையாலேனும் இத்தொடர்பு இடையறுமாயின், அவற்றிற்கு உளதாகும் கையறவு நம் நினைவு நிலையினைக் கடந்து நிற்கும் என்பது அப்பெரியார் கூறும்பொருள்.

பறவைகள் சில காலங்களில் பாடுதலில் வேட்கைமிகுகின்றன. அக்காலத்து அவ்வேட்கையினை அடக்கிக்கொள்ளும் மனநிறை அவற்றிற்கு இருப்பது கிடையாது. வேண்டுங் காலத்துப் பாடுதலும், வேண்டாக் காலத்துப் பாடாதமைதலும் அவற்றிற்கு ஒல்லுவதில்லை. நீர் வழிச் செல்லும் மிதவைபோல, வேட்கை வழிச் செல்லும் இயல்பே புடைமையின், புள்ளினம் உயிர்த் தன்மையினையே உறுவ ஆகின்றன.

ஒரு பறவை இட்டு வைத்துள்ள முட்டைகளை நீக்கிவிட்டு, அவற்றைப்போல உருவமும், நிறமும் உடைய கோலி (ரவை)

---

* Doctor. Robert Cushman Murphy of the American Museum of Natural History in New York, N. America.

† "They live by a Chain system of Stimuli and responses" —Dr. Murphy.

குண்டுகளை வைப்போமாயின், அப்பறவை, உண்மை துணிய மாட்டாது, அவற்றை முட்டையென்றே கருதி யமைந்துவிடக் காணலாம். இதனாலும், அவற்றிற்கு நினைவுச் செய்கை இல்லை யென்பது விளங்குகின்றது. இதைக்காணும் அறிஞர்க்கு, இக்காலத்திற் சிலர் கோழி முட்டைகளோடு வாத்துக்களின் முட்டைகளை வைத்துப் பொரிப்பிக்கும் இயல்பு புதுமையாகா தென்பது தோன்றும். புனைந்துரை வழக்கிலும், புலவர்கள் சங்கீன்ற முத்துக்களை அன்னம் தன் முட்டையெனக் கருதி அடைகாக்க முயலும் எனப் புனைந்துரைத்தற்கும் இயைபுண் டென்று அறியலாம்.

ஒரு பறவை தன் கூட்டைவிட்டு, இரைதேடற் பொருட்டு நெடுந் தொலைவு செல்லும். செல்லினும், பொழுது சாய்ந்ததும் அது தன்கூடு இருக்கும் இடத்தைத் தப்பாது சென்று சேர்ந்து விடும். இதனால் இதற்கு உண்மையறிவு உண்டுஎன்று காணலாம் ஆயினும், அப்பறவை யில்லாதபோது, அக்கூட்டினை எடுத்து ஒருகசதூரத்தில் பெயர்த்து வைத்துவிடின், திரும்பிவரும் அப் பறவை நேரே தன் கூட்டைத் தேடியடைவது கிடையாது. முன்னே அமைந்த இடத்தில் அக்கூடு இன்மை கண்டதும், அது விரைந்து பறந்து நெடுந்தூரம் சென்று மீண்டு அவ்விடத் துக்கேவருகின்றது. இவ்வாறுபலமுறையும் போவதும் வருவது மாகவுமன்று, முடிவில் குருட்டுநெரியாகத் தன் கூட்டை அடை வது உண்டே தவிர, தான்சமைத்த கூட்டினையே சிறிதுஅமைதி யுடன் தேடிக்காணும் திறமை அதன்பால் காணப்பட்டிலது. இரண்டு கசதூரத்தில் பெயர்த்து வைக்கப் பட்டிருந்த தன் கூட்டை யடைவதற்கு ஒரு பறவைக்கு மூன்றுமணி நேரம் வேண்டியிருந்ததாகவும், அத்துணை நேரம் வருந்தி யலைந்தும் முடிவில் தற்செயலாக அக்கூட்டைக் காணமுடிந்ததேயன்றி, தன்அறிவுப்பொறியால் ஆராய்ந்து காணமுடிந்ததாகத் தெரிய வில்லை யென்றும் ஆங்கில நாட்டு உயிர் நூலாராய்ச்சியாளர் கூறுகின்றார். "பறவைக் கூட்டைக் கலைக்காதே, பாவம் அது தான் பொல்லாதே" என்று தமிழ் நாட்டில் ஒருபொருளுரை நிலவுவதும். பறவையின் இம்மடமை நிலை கருதியே போலும்!

பறவைகள் தம் கூடுகட்கு வருவதும் போவதும் செய்யு மிடத்து, சிறப்புடைய செயலொன்று அவற்றாற் செய்யப் படுகின்றது. வரும்போது ஏதாவதொன்றைக் கொணருவதும் போம்போது ஏதாவதொன்றைக் கொண்டேகுவதும் அவற்றிற் கமைந்த உயிர்த்தன்மை. இத்தன்மை அவை தம் கூட்டைச் "சுகாதார நிலையில்", தூய்தாக, வைத்துக் கோடற்கு உபகார மாகின்றது. அவைதம் கூடுகளில் தங்கியிருக்குங் காலத்தில் அவற்றால் இடப்பெறும் எச்சங்களால், அக் கூடுகள் தூய்மை யின்றிக் கெடலாம். போம் போது ஏதாவதொன்றைக் கொண்டேகுவதாகிய உயிர்த்தன்மையால், அவை குடம்பை நீங்கிப் போம்போது, அவ்வெச்சங்களை எடுத்தேகி விடுகின்றன. அதனால், அக்கூடுகள் எப்போதும் தூயநிலையில் அமைந்து நிற் கின்றன. இதனை நோக்கின், பறவைகள் மக்களைவிட எத்துணைச் சிரிய "சுகாதார" நெறியினவாக இருக்கின்றன என்பது தோன்றும்! இவ்வாறு செய்வதால், குடம்பைகள் தூயவாத லோடு, பகையினங்கள், எச்சங்களின் நாற்றம் உணர்ந்து போந்து தீங்கு செய்தற்கும் ஏது இலதாகின்றது. இவ்வியல் பினை முதன் முதலாகக்கண்ட அறிஞர் சிலர், இவ்வண்ணம் தம் உறையுளை மாசுபடா வகையிற் காக்கும் பறவைகட்கு இந்நன் மாண்புடைமை அவற்றின் இயற்கை மதிநுட்பத்தின் பயன் என்றே துணிந்தனர். கேம்பிரிட்ஸ் சர்வகலாசாலை (Cambridge University) யினுள்ள மாணவர் சிலர், இதன் உண்மை துணிய வேண்டி, ஒருபறவையின் கூட்டை, அப்பறவை புறத்தே சென் றது திரும்பிவருவதற்குள், அதன் பார்ப்புக்கள் இட்டிருந்த எச்சம் முதலிய கழிபொருள்களைத் தாமே களைந்து, தூய்மை செய்துவைத்தனர். திரும்பி வந்த பறவை தான் கொணர்ந்த இரைப்பொருளைத் தன் காதற் பார்ப்புகட்கு அருத்திவிட்டு, ஒரு குச்சியினை எடுத்தேகிற்று. அம்மாணவர்கள் முன் போலவே, அக்கூட்டினை அடிக்கடித் தூய்மை செய்து வரலா யினர்; அப்பறவையும் போம்போதெல்லாம் கூட்டிலிருந்தே ஒரு குச்சியினை எடுத்தேகிக் கொண்டே வந்தது. இதற்குள் பார்ப் புக்களும் முதிர ஆரம்பித்தன. முடிவில் அக்கூடு கலைந்தே

போயிற்று. "வரும்போதொன்றைக் கொண்டு வருவதும், போம்போதொன்றைக்கொண்டு செல்வதும் அவற்றிற்கு, ஒரு காரணமுமின்றி நிகழும் செயல்வகையாகலின், புழு முதலிய இரைப்பொருள் கொண்டுவந்த தான், கொண்டு போதற்குரிய எச்சமாதல், பிறவாதல் ஏதும் இல்லாமையால், கூட்டின் குச்சியையே கொண்டு போவதாயிற்று,'' என்று டாக்டர் மர்பி என்னும் பேராசிரியர் காரணங் கூறுகின்றார்.

ஆப்பிரிக்கா நாட்டில் தூக்கணாங் குருவி யினத்தைச் (Weaver bird) சேர்ந்த ஒருவகைப் பறவை இருக்கிறது. சிறு சிறு நார்களையும், குச்சிகளையும் கொணர்ந்து இறுகப் பிணித்து ஒள்ளிய முடிச்சுகளை இட்டுக் குடம்பை (கூடு) யமைத்தல் அதற்கு இயல்பு. உலகில் நல்லறிவுடைய உயிர்களால் அமைக்கப்பெறும் முடிச்சுகளைவிட இதன் முடிச்சுகள் அருமையும் செம்மையும் உடையவாய் இருத்தலின், இவற்றை ஒள்ளிய முடிச்சுகள் என்றும். இவற்றைக்கண்ட உயிர்நூல் அறிஞர்க்கு, இப்பறவைக்கு இவ்வாறு முடியிடும் வன்மை எவ்வாறு உண்டாயிற்றெனும் ஆராய்ச்சி தோன்றுவதாயிற்று. பலர் பல முடிவுகளைக் கூறுவாராயினர். ஒரு சிலர், இப்பறவையின் தோற்றத்துக்கு முதற்காரணமாக இருந்த முதற்பறவைவகை இவ்வண்ணம் குடம்பை நெய்தமைக்கும் நேர்மையுடையவாய் இருந்திருத்தல் வேண்டும்; அந்நேர்மையே அவற்றின் வழிவந்த இப்பறவைபால் விளங்குவதாயிற்று என்று கூறினர். இக்காலத்து அறிஞர் சிலர் இதன் உண்மை நிலையினைத் துணிந்து காண விரும்பி, இப்பறவையின் முட்டைகளைச் செயற்கை முறையால் பொரிக்கச் செய்து, அப்பொரித்த பார்ப்புக்களையும் தனிப்பட வளர்த்து வந்தனர்; வளர்ந்த அவை, திருந்திய பறவையாகிய வழி, அவற்றின் இனத்துள் ஏதனோடும் கூடாமலும், காண்பதின்றியும் தனிப்பட வளர்ந்தனவாயினும், தாய்ப் பறவையும் பிறவும் எவ்வாறு அமைத்தனவோ, அவ்வாறே முடிச்சுகள் அமைத்துக் குடம்பை யமைக்கத்தொடங்கின. குலவிச்சை கல்லாமற்பாகம் படுமன்றோ! இதைக்கண்டதும், அவ்வுயிர்நூல் அறிஞர், இச்செய்கை பரமனது திருவருளால் இப்பறவைகட்குக் கருவிலே வாய்ந்த திருவாதல் வேண்டுமென்றே துணிபு கொண்டனர்.

(தொடரும்.)

# காலவாராய்ச்சி

கோமான். ம. வி. இராகவன் வித்துவான்
ஔவைத்தமிழகம், திருவத்திபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 6. பக்கம் 223.)

## III

இனி, தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரைவகுத்த ஆசிரியர் பேராசிரியரும், தெய்வப் பனுவலாகிய திருக்கோவையாருரைகண்ட பேராசிரியரும், ஒருவரே யென்பதுபற்றி யாராய்தலுறுகின்றார் திரு. ஐயங்காரவர்கள். உறுகின்றவர், முதற்கண் ஆசிரியர் அடியார்க்கு நல்லார் காலங்காண முயலுகின்றார். முயல்பவர், அடியார்க்கு நல்லார், "திங்களஞ் செல்வன்" (சிலப். 4:3) என்றவிடத்துக் "காலமுலகம்"...............இதுவே விதியெனக் கொள்க, என்று இலக்கண விசேடத்தை விரித்துக் கூறினர். இலக்கணக் குறிப்புக் கூறுமிடங்களில் எல்லாம் சூத்திரமுதலுரைத்துக் குறித்துப் போவது அடியார்க்கு நல்லார் பெருவழக்கு; இவ்விடத்து மூன்று சூத்திரங்களின் கருத்தை விரித்துக்கூறியதால் அடியார்க்கு நல்லார் தாம்புதிதாக ஓர் கருத்தை வெளியிட்டனராவர். சேனவரையர் கருத்தும் ஒத்திருப்பதால் அடியார்க்கு நல்லார் சேனவரையருக்கு பிற்பட்டவரென்று, திரு. சோமசுந்திரம் பிள்ளையவர்களும் கூறியுள்ளார். சேனவரையர் அடியார்க்கு நல்லார் உரையைத் தழுவினரென்பது பொருந்துமாதலின் அடியார்க்கு நல்லார் சேனவரையருக்கு முற்பட்டவரெனக் கொள்க, என்று கூறுகின்றனர்.

இதில், திரு. ஐயங்காரவர்கள் காட்டும் ஏது, அடியார்க்கு நல்லார், "கால முலகம்", "நின்றாங் கிசைத்தல்", "இசைத்தலுமுரிய" (தொல். சொ. 58, 59, 60) என்ற சூத்திரங்களின் இலக்கண விசேடத்தை விரித்துக் கூறியிருப்பது. அதனைச் சாதிப்பது: அம்மூன்று சூத்திரங்கட்கும் அடியார்க்கு நல்லார் புதியதோர் கருத்தை வெளியிட்டனரென்பதும், அதனைச்

சேனாவரையர் தழுவினமையின் அடியார்க்கு நல்லார் அவர்க்கு முற்பட்டவரென்பதுமாம்.

இவர் கருத்துப்படி அம்மூன்று சூத்திரங்களின் கருத்தையும் விரித்துக் கூறியதால் அடியார்க்கு நல்லார் தாம் புதியதாகவோர் கருத்தை வெளியிட்டாராவரெனின், உரைப்பாயிரத்தின்கண், "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்தமொழியா னடிநிமிர்ந் தொழுகினும்", (தொல். பொ. 239) என்ற பொருளதிகாரச் சூத்திரத்தின் கருத்தையும், பதிகவுரைக்கண், (61-2) "லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்" (தொல். எழு. 481) என்ற சூத்திரத்தின் கருத்தையும் விரித்துரைத்துள்ளாராதலான் அச்சூத்திரங்கட்கும் இவர் புதிதாகவோர் கருத்தை வெளியிட்டாராவர். அங்ஙனமின்மையானும், இளம்பூரணரும், "காலமுலகம்" முதலிய மூன்று சூத்திரங்கட்கும் இவர் கொண்ட பொருளே கூறியுள்ளமையானும்* அடியார்க்கு நல்லார் அச்சூத்திரங்கட்குப் புதிதாகவோர் கருத்தை வெளியிட்டாரென்பதும், அதற்கு அவர் அச்சூத்திரங்களின் கருத்தை விரித்துக் கூறியுள்ளமை ஏதுவாதலும் பொருந்தாக் கூற்றாதலறிக.

---

* "காலமுலகம்" என்னுஞ் சூத்திரத்துள், ஞாயிறு திங்களென்பன உயர்திணை மேலனவாய்ப் பால் பிரிந்திசையா வெனவும், "நின்றாங்கிசைத் தலிவணியல் பின்று" எனவே, நின்ற முறையானே ஈறுபெற்று நின்று உயர்திணையா யிசைத்தல் இவணியல் பின்றெனவும் கூறிய வாசிரியர், "இசைத்தலு முரிய வேறிடத்தான" எனக் காலமுதலாகிய சொல் உயர்திணையா யிசைத்தலுமுரிய, ஈறுதிரிந்து வாய்பாடு வேறுபட்ட வழியென்றாராகலின்" (சிலப். அந்தி: 3-4 உரை) என்பது கருத்து விரித்துரைத்தாராகக்கூறப்படும் அடியார்க்கு நல்லார் அச்சூத்திரங்கட்குக் காட்டிய குறிப்பு.

"காலமுலகம்... ...வுயர்திணைமேன." இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் உயர்திணையான் முடியாது அஃறிணையான் முடியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று. உரை: காலம், உலகம் என்றித் தொடக்கத்தனவும் உயர்திணை யெனினும் உயர்திணைப் பால் பிரிந்திசையா; அஃறிணையான் இசைக்கும் என்றவாறு. 'பிறவும்' என்றதனால், 'வெள்ளி எழுந்து, செவ்வாய் எழுந்தது' என்பன கொள்க. இச்சூத்திரம் தெய்வஞ் சுட்டியபொருள் அஃறிணை யான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார். அற்றன்று, ஈண்டுத் தெய்வமும் உள, மக்களும் உளர்; இனி, மேற் சூத்திரம், 'முன்னர்த்தான் உணரப்படும்' என்றவாறு கூறினார், இச்சூத்திரம் உயர்திணைப்பொருளே அஃறிணை முடிபு ஏற்பனவற்றிற்குக் கூறினார் என்பது".

சில்வழிச் சூத்திரங்களைக் கூறிப் பொருளையும் விரித்துரைத்துப் பொருத்திக் காட்டுதலும், சில்வழிச் சூத்திர முதலுரைத்துச் சேறலும், சில்வழிச் சூத்திரந்தானுங் காட்டுதலின்றிக் கருத்துரைத்து அமைத்துப் போதலும், உரையாசிரியன்மார் பலர்மாட்டும் ஒப்பக் காணப்படுவதொரு பொது வழக்காம். அவ்வழக்கே அடியார்க்கு நல்லாரும் மேற்கொண்டுள்ளமை அவர் உரைமுற்றும் ஒருகால் நோக்குவாரும் எளிதிலுணரலாவதொன்றாக, "இலக்கணக் குறிப்புக் கூறுமிடங்களில் எல்லாம் சூத்திர முதலுரைத்துக் குறித்துப்போவது அடியார்க்குநல்லார் பெருவழக்கு" என்றலும், அதுகொண்டு ஒன்றனைச் சாதித்தலும் அவர் உரையிற் போதிய பயிற்சியும் ஆராய்ச்சியுமின்மையையே காட்டுவனவாமென்க.

பதிகவுரைக்கண், இவர், 'வாயிற்கோட்டமென்பது' 'லகார விறுதினகாரவியற்றே' என்பதனால், ஏழனுருபின்கண் வந்த சாரியை லகாரவீறு, வருமொழி முதலில் வல்லெழுத்து வர னகாரம் வேற்றுமைக்கண் திரிந்து றகார மாயிற்றே போலத்

---

"நின்றாங்......பின்று" இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், "குடிமை யாண்மை" (கிளவி. 57) என்பதற்குப் புறனடை கூறுதல் நுதலிற்று.

உரை: இச்சொல்லப்பட்டவையிற்றுக்கு நின்றாங்கு இசைத்தல் இயல் பின்று என்பது. எனவே, மேற்சூத்திரத்திற் சொல்லப்பட்டனவற்றுக்கு நின்றாங்கு இசைத்தல் இயல்புமாம் என்பது.

"இசைத்தலு......தான"; இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இது, "காலம்உலகம்" (கிளவி. 58) என்பதற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று. உரை: வேறிடம் என்பது வேறுவாய்பாடு; வேறுவாய்பாட்டாற் சொல்ல இசைக்கும், ஓதியவாய்பாட்டாற் சொல்ல இசையாது என்பது, இஃது இளம்பூரணர் கூறியுள்ளவுரை. (தொல். சொல். இளம். 58, 59, 60)

இவ்விருபேருரையையும் ஒப்பிட்டு நோக்குவார்க்குப் பொருணெறியால் இரண்டற்கும் வேறுபாடின்மையும், அம்மூன்று சூத்திரங்களின் கருத்தையும் விரித்துரைத்தவர் அடியார்க்கு நல்லார் அல்லர் என்பதும், இளம்பூரணரே விளங்கவிரித்துரைத்துள்ளமையும் பிறவும் புலனாகாமற் போகா.

திரிந்தது என்றும், "கோச் சேரலென்பது, ஓகார விறுதி யேகார வியற்றே" என்பதனால் ஓகார வீற்றுப் பெயர்ச் சொல் அவ்வழிக்கண் ஏகரா வீற்று அல்வழியே போல வல்லெழுத்துப் பெற்று முடிகவென்றலின் வல்லொற்று மிக்கது" என்றும் இங்ஙனம் சில்வழிச் சூத்திரக் கருத்து விரிக்கப்படுதல் நோக்கின், தாம் எடுத்துக் காட்டும் சூத்திரம் வெளிப்படையான் விளங்காத பொருளருமை யுடையதாய வழியும், மாட்டேறுடைய தாயினும், பல சூத்திரங்களான் ஒன்று அமைக்கவேண்டுழியும் அவற்றின் கருத்தையும் உடன் கூறிமுடித்துக் காட்டுதல் இவர் வழக்காதல் புலனாகின்றது. ஆகவே, அவ்வழக்கால், "திங்களஞ் செல்வன்" 'காரரசாளன்", "திங்கட்செல்வன்" (சிலப்.4: 4, 14: 96, 8: 59) என்பனவற்றை யமைத்தற்கு மூன்று சூத்திரங்கள் வேண்டியிருத்தலானும், அவைஎளிதின் விளங்கும் பொருள வல்ல வாகலானும், அங் ஙனம் சூத்திரங்காட்டிக் கருத்து விரித்து முடித்தனரென்றலே நிரம்புவதாகும்.

இவர் ஒரு காதைக்கட் கூறப்பட்ட தொன்றனையே மீட்டும் பிற காதைகளுள்ளும், வருவழிதோறும், படிப்பாற்கு மயக்க மின்றி நன்கு விளக்குதற் பொருட்டுக் கூறுதலுடையர். இங் ஙனம் இவ்வாசிரியர் பிறநூற் பயிலாது இந் நூல் மட்டில் படிக் கலுறுவார்க்கும், இந்நூலுள்ளும் ஒரு காதை கற்காது ஒரு காதை கற்றுணரலுறுவார்க்கும் நன்கு விளங்குதல் வேண்டி, பிற நூல்களுள் விளக்கப் பட்டுள்ளனவற்றையும், இந்நூலுள் ளும் முன்னுக, பின்னுக விளக்கப் பட்டுள்ளனவற்றையும், ஆங் காங்கு வருவழிதோறும் விரித்துரைக்கு மிவ்வியல்பினராதல், முன்னர் அரங்கேற்றுக் காதை முதலியவற்றுள் விளங்கக் கூறிய வற்றையே பின்னரும் ஊர்காண்காதைக் கண்ணும் விளக்கிக் கூறி, "இவை யெல்லாம் முன்னம் அரங்கேற்றுக்காதை முதலிய வற்றுள் விரித்துக் கூறினவாதலின், ஈண்டும் விரித்துக் கூறுதல், 'கூறியது கூறல்' என்னும் குற்றமாமேனின், ஒக்கும்; ஆண்டுக் கூறிய அடிகளே ஈண்டும் கூறுதலானும், இக்காதை யொன்றனை யுமே கற்றுணர்வார்க்குப் புலப்படவேண்டுதலானும், ஈண்டும் விரித்

துரைக்கப் பட்டன'', (14: 156 உரை) என இவ்வாசியர் தாமே கூறியிருத்தலானும், அந்திமாலைச் சிறப்புச் செய்காதைக்கண் (3-4 உரை) திங்களஞ் செல்வன்: ''காலமுலகம்'' என்னுஞ்சூத்திரத்துள், ஞாயிறு, திங்களென்பன உயர்திணை மேலன வாய்ப்பால் பிரிந்திசையாவெனவும், ''நின்றாங்கிசைத்தல் இவணியல்பின்று'' எனவே, நின்ற முறையானே ஈறுபெற்று நின்று உயர்திணையா யிசைத்தல் இவணியல்பின்றெனவும் கூறியவாசிரியர், ''இசைத் தலுமுரிய வேறிடத்தான'' எனக் கால முதலாகிய சொல் உயர் திணையா யிசைத்தலுமுரிய, ஈறுதிரிந்து வாய்பாடு வேறு பட்ட வழியென்றாராகலின் இதுவும் ஈறுதிரிந்து திங்களஞ்செல்வன் என்றாயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவனவற்றிற்கும் இதுவே விதியென்க,'' என விளங்கக்கூறி, மேலே இவ்வாறு வருவனவற் றிற்கும் இதுவே விதியாகக் கொள்ளுமாறு முடித்துக் காட்டி யவர், மேலே இவ்வாறு வருமிடங்களில் ஈண்டுத் தாம் விளக்கி யுள்ளமை குறித்துச்செல்லாது, மேல் வேனிற்காதைக் கண்ணும் (59 உரை) ஊர்காண்காதைக் கண்ணும் (96-உரை), ''திங்கட் செல்வன்'', ''காரரசாளன்'' என்பனவற்றை யமைகலுற்று, இங்ஙனமே, ''காலமுலகம்'', ''நின்றாங் கிசைத்தல்'', ''இசைத் தலுமுரிய'' என்னும் மூன்று சூத்திரங்களையும் முறையே காட்டி, அதனோடு மனமமைகிலராய், அவற்றின் கருத்தையும் முற் காட்டிய வதனில் ஒரு சிறிதும் வேறுபாடின்றி விரித்துக் கூறி முடித்திருத்தலானும் புலனாதல் கண்டுகொள்க.

இதுகாறும் கூறியவாற்றான், ''காலமுலகம்,'' முதலிய மூன்று சூத்திரங்கட்கும் ஆசிரியர் இளம்பூரணர் கூறிய வுரையையே, ஆசிரியர் அடியார்க்கு நல்லார், தொல்காப்பியம் பயிலாது சிலப்பதிகாரம் கற்றுணர் வார்க்கும் புலப்படுதல் வேண்டி விளக்கிக் காட்டினரல்லது, தாம் புதிதாக வோர் கருத்தைவெளியிட்டனரல்லரென்பது பிறவும் விளக்கியவாறும்.

இனி, ''சேனாவரையர் அடியார்க்கு நல்லார் உரையைத் தழுவினரென்பதும் பொருந்துமாதலின் அடியார்க்கு நல்லார் சேனாவரையருக்கு முற்பட்டவரெனக் கொள்க'' என்னும் கூற்றைச் சிறிது ஆராய்தும்.

இவர் காட்டும் ஏது: அடியார்க்கு நல்லார் காட்டிய கருத்தும் சேனாவரையர் கூறிய வுரையும் தம்முளொத்திருத்தல். அதனாற் சாதிப்பது: சேனாவரையருக்கு முற்பட்டவர் அடியார்க்கு நல்லார் என்பது.

இவ்வேதுபற்றி யிம்முறையே நோக்கின், திரு. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் கொண்டாங்கே, இலக்கண வுரையாசிரியராகிய சேனாவரையர் உரையை இலக்கிய வுரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தழுவினரென்பதும்பட்டு, சேனாவரையர் அடியார்க்கு நல்லார்க்கு முற்பட்டவரென்பதெய்தி ஒன்றையொன்று பற்றுதல் என்னும் குற்றம் படுதலின் அதனை முன்னர்த் தக்க ஏதுக்களான் மறுக்கவேண்டியவர், அதுசெய்யாது தன்கோள் நிறுவப்புகுதல் நெறியன்றென்க.

அன்றியும், அடியார்க்கு நல்லாரின் முற்பட்டவராக, இவரானேயும் கொள்ளப்படும் இளம்பூரண ருரையோடும் சேனாவரையர் உரையொத்திருத்தலின்*, அவருரையே சேனாவரைய

---

* "காலமுலகம்..........வுயர்திணைமேன"

"இதன் பொருள்: காலமுதலாகச் சொல்லப்பட்ட பத்தும் அத்தன்மைய பிறவுமாகிய அப்பகுதிக்கண் வருஞ்சொல்லெல்லாம், உயர்திணைச் சொல்லாயினும், உயர்திணைகட் பால் பிரிந்திசையா, அஃறிணைப் பாலாயிசைக்கும் என்றவாறு."

"நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே"

"இதன் பொருள்: ஈறுதிரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாயிசைத்தல் ஈண்டியல் பின்று என்றவாறு.

ஈண்டென்றது காலமுதலாகிய சொற்களை. அவை இடையீடின்றி மேற் சொல்லப்பட்டு நிற்றலின் 'இவண்' என்றார்.

இவணியல்பின்றெனவே, குடிமை யாண்மை முதலாயின சொல்லின் கண், ...... நின்றாங்கு நின்று உயர்திணையா யிசைத்தல் இயல்புடைத்தென்பதாம்."

"இசைத்தலு முரிய வேறிடத்தான"

"இதன்பொருள்: காலமுதலாகிய சொல் உயர்திணையாயிசைத்தலுமுரிய, ஈறுதிரிந்து வாய்ப் பாடு வேறுபட்டவழி என்றவாறு" (தொல். சொல். சேனா. 57, 58, 59)

இது சேனாவரையர் அம்மூன்று சூத்திரங்கட்கும் கூறியுள்ளவுரை. இவற்றிற்கு இளம்பூரணர் கூறியுள்ளவுரை முன்னர்க் காட்டப்பட்டுளது. இவ்விருவருரையையும் ஒப்பித்து நோக்கின் சூத்திரப் பொருள் மட்டில் ஒரு சிறிதும் வேறுபாடின்றியொத்திருத்தல் விளங்கும்.

ரால் தழுவப்பட்ட தென்றல் பொருந்துமன்றி, அடியார்க்கு நல்லாருரையைச் சேனாவரையர் தழுவினரெனவாளா கூறுதல் ஏலாதாம்.

இந்நெறி மேற்கொள்ளின், தொல்காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றிற்கு அடியார்க்குநல்லார் கொண்டுள்ள கருத்தும், அச்சூத்திரங்கட்கு ஆசிரியர் இளம்பூரணவடிகள் கூறியுள்ளவுரையும் ஒத்திருத்தலின், அதுகொண்டு அடியார்க்குநல்லார் கருத்தையே இளம்பூரணர் தழுவினரென்றும், ஆதலான் அவர் அடியார்க்கு நல்லார்க்குப் பிற்பட்டவராலெனக் கடாயினர்க்கு விடையின்மையுமறிக. இதுபோது இளம்பூரணருரைப் பதிப்பின்கண் அம்மூன்று சூத்திரங்களின் கீழும் பதிக்கப் பட்டுள்ளவுரை இளம்பூரணர் கூறியவுரை யன்று, இடையில் தவறுகச் சேர்க்கப்பட்டதாதல் வேண்டுமென்பரேல், அங்ஙனம் அச்சூத்திரங் கட்குத்தன் கருத்தோடு மாறுபட இளம்பூரணர் வேறுவுரை கூறியிருப்பரேல், சேனாவரையர் அதனை மறுதுவிட்டுச் சென்றிராரென மறுக்க. இங்ஙனம் இவர் குற்றம்பட முடிபு கூறிச் செல்வது இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருபேராசிரியர்களுடைய தொல்காப்பிய வுரையையும் அடியார்க்குநல்லாருடைய சிலப்பதிகார வுரையையும் ஆராய்ச்சி முறையிற் செவ்வனம் பயிலாமையின் நிகழ்ந்ததாயும். உரையாசிரியன்மாருரைகளையும், அவர் தம் கருத்தையும், போக்கையும் உய்த்துணர்ந்து உண்மை காணலாற்றாது வாய்தந்தன கூறி யிடர்ப்படும் இவர் தம் கூற்று எவ்வாற்றானும் ஒவ்வாமைகாண்க.

(தொடரும்.)

---

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "புரட்டாசி" நன்கொடை

| திங்கள் நன்கொடை | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன் | அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, ரே. அ. அனந்தவிசய முதலியார் | ,, | 1 | 8 | 0 |
| ,, T. S. சபாபதி பிள்ளை தஞ்சை | ,, | 1 | 0 | 0 |
| ஆண்டு நன்கொடை | | | | |
| ,, N. L. வரதராஜலு நாயுடு கரந்தை | ,, | 30 | 0 | 0 |
| ,, P. சுந்தரமய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, A. பொன்னுசாமி நாடார் | ,, | 10 | 0 | 0 |
| ,, A. Y. அருளானந்தசாமி நாடார் | ,, | 10 | 0 | 0 |

## மருத்துவசாலைக்குதவிய 'ஐப்பசி' நன்கொடை

| | | | | |
|---|---|---|---|---|
| ,, R. வேங்கடாசலம் பிள்ளை திருவையாறு | ,, | 1 | 0 | 0 |
| ,, S. பொன்னுசாமி பிள்ளை ,, | ,, | 6 | 0 | 0 |
| ,, இராவ்சாகிபு த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | அவர்கள் | 38 | 12 | 6 |